செ.வெ.எண்: 123 நாள்: 01.04.2012

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இரங்கற் செய்தி – 1.4.2012**

2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள் இன்று காலை ஏற்பட்ட சாலை விபத்தில் அகால மரணமடைந்துவிட்டார் என்ற செய்தி அறிந்து ஆற்றொணாத் துயரமும் மிகுந்த மன வேதனையும் அடைந்தேன்.

சகோதரர் முத்துக்குமரன் சட்டப் பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு திருவரங்குளம் பஞ்சாயத்து யூனியன் உறுப்பினராக நல்ல முறையில் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். அனைவரிடத்திலும் அன்புடன் பழகக்கூடியவர். சிறிது காலமே சட்டமன்றப் பேரவை உறுப்பினராக பணியாற்றினாலும், சிறப்புடனும், திறம்படவும் பணியாற்றி, அனைவரின் அன்பையும், பாராட்டுதலையும் பெற்றவர்.

சகோதரர் முத்துக்குமரன் அவர்களின் மறைவு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு பேரிழப்பாகும். சகோதரர் முத்துக்குமரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9